(6 pages) **Reg. No. :**.......................................

**Code No. : 32013** **Sub. Code : GMTA61/ GMTC61**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil/Tamil With Computer Applications — Main

சங்க இலக்கியம்

(For those who joined in July 2012-2015)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. அகவன் மகளே அகவன் மகளே!

   மனவு கோப்பி அன்ன நல் நெடுங்கடந்தல் - எனும் பாடலை பாடியவர் யார்?

   (அ) கபிலர் (ஆ) பரணர்

   (இ) ஔவையார் (ஈ) பேயனார்

2. பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்சால் நாவல் பொதிப்புற இருங்கனி - எனும் பாடலை
பாடியவர் யார்?

(அ) பிசிராந்தையார் (ஆ) அம்மூவனார்

(இ) பிரமசாரி (ஈ) நக்கீரர்

3. அகநானூற்றினை தொகுத்தவர் யார்?

(அ) பெருந்தேவனார் (ஆ) பாண்டியன் வழுதி

(இ) உருத்திரசன்மர் (ஈ) கபிலர்

4. பாலைக் கலியைப் பாடியவர் யார்?

(அ) நல்லந்துவனார் (ஆ) அம்மூவனார்

(இ) பொய்கையார் (ஈ) பெருங்கடுக்கோ

5. பதிற்றுப்பத்தில் கிடைத்த பாடல்கள் எத்தனை?

(அ) 100 (ஆ) 90

(இ) 80 (ஈ) 70

6. கருந்தேர் குழித்த நெற்றல் ஆங்கண்
வெள்வாய்க் கழுதை புல் இனம் பூட்டிப் ... என்ற பாடலை
பாடியவர்

(அ) நெட்டிமையார்

(ஆ) பண்டாரஸ் கண்ணனார்

(இ) குறுங்கோழியூர்கிழார்

(ஈ) கபிலர்

7. பொருநராற்றுப்படை பாடியவர் யார்?

(அ) நக்கீரர் (ஆ) முடத்தாமக் கண்ணியர்

(இ) காரிக்கண்ணனார் (ஈ) கபிலர்

8. கரிகால் பெருவளத்தானின் தந்தை

(அ) இளஞ்சேட்செழியன் (ஆ) மதுரை கணக்காயனார்

(இ) சோழன் நலங்கிள்ளி (ஈ) மருதனிள நாகனார்

9. நெடுநெல்வாடையின் பாட்டுடைத் தலைவன்

(அ) திருமால்

(ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்

(இ) பாரி

(ஈ) நெடுஞ் சேரலாதன்

10. அரசியின் மாளிகையில் உள்ள பாவை விளக்கு யாரால் செய்யப்பட்டது?

(அ) எகிப்தியர் (ஆ) எவனர்கள்

(இ) பாண்டியர்கள் (ஈ) சேரர்கள்

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) "அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்" என கபிலர் பாடிய பாடலின் சிறப்பினை எடுத்துரைக்க.

Or

(ஆ) நீ உணர்ந்தனையே தோழி வீஉகப்
புன்னை பூத்த இன்நிழல் உயர்கரை – என்று தோழி தலைமகளுக்கு வரைவுமலிந்து உரைத்ததனை எடுத்துரைக்க.

12. (அ) மருதனிளநாகனார் தலைவன் கூற்றாக கூறிய செய்தியை எடுத்துரைக்க.

Or

(ஆ) கலித்தொகை வாயிலாக பாலை நிலத்தின் இயல்புகளை விளக்குக.

13. (அ) நாட்புனைக் காத்தல் கூறி மன்னனை எவ்வாறு வாழ்த்தினர்?

Or

(ஆ) மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும் ... என்று சேரமான் பெருஞ்சோற்று உதியனை எவ்வாறு புகழ்ந்து பாடினார்?

14. (அ) யாழின் வருணனை குறித்து எழுதுக.

Or

(ஆ) பரிசு பெற்றோன் கூறிய அறிவுரை யாது?

15. (அ) கோவலர் எவ்வாறு குளிரால் நடுங்கினர்?

Or

(ஆ) மகளிர் எவ்வாறு மாலைக் கால வழிபாடு செய்தனர்?

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை எழுதுக. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) குறுந்தொகை பாடல்களில் காணலாகும் பாடல் நயங்களை நும்பாடப் பகுதி கொண்டு விளக்குக.

Or

(ஆ) ஐங்குறுநூற்றில் வேழப்பத்து குறிப்பிடும் செய்திகளை தொகுத்துரைக்க.

17. (அ) முல்லைத்திணையின் சிறப்புகளை அகநானூறு வாயிலாக விளக்குக.

Or

(ஆ) திருப்பரங்குன்றத்தின் சிறப்புகளை பரிபாடல் கொண்டு விளக்குக.

18. (அ) மன்னனின் பெருமையும், கொடை சிறப்பும் கூறி விளக்குக.

Or

(ஆ) குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனை எவ்வாறு புகழ்ந்து பாடியுள்ளார்?

19. (அ) அரசனின் விருந்தோம்பல் சிறப்பினை விளக்குக.

Or

(ஆ) சோழ நாட்டின் இயற்கை எழிலை வருணிக்க.

20. (அ) அரசியின் அரண்மனை எவ்வாறு இருந்தது? விளக்குக.

Or

(ஆ) தலைவனை பிரிந்த தலைவி எவ்வாறு வருந்தினார்?

(6 pages) **Reg. No. : ......................................**

**Code No. : 32014** **Sub. Code : GMTA 62/ GMTC 62**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil/Tamil with Computer Applications — Main

இலக்கணம் – பொருள்

(For those who joined in July 2012–2015)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

1. பெருந்திணை என்பது

   (அ) அன்புடைக்காமம்

   (ஆ) பொருந்தாக்காமம்

   (இ) ஒருதலைக்காமம்

   (ஈ) காமம் மிகுதிறம்

2. நிலமாகிய முதற்பொருள்

   (அ) இருவகை (ஆ) ஈரைவகை

   (இ) மூவகை (ஈ) பன்னிருவகை

3. இல்வரை இகந்தது

(அ) இரவுக்குறி

(ஆ) பகற்குறி

(இ) ஒருவழித்தணத்தல்

(ஈ) எதுவுமில்லை

4. தலைவியைப் பிரியக்கருதிய தலைவன் அச்செலவினைத் தவிர்த்தது.

(அ) உடன்போக்கு

(ஆ) செலவழுங்கல்

(இ) நெஞ்சொடு கிளத்தல்

(ஈ) அறிவு மயங்கல்

5. ஆகோள் என்பது.

(அ) ஆரவாரம் செய்தல்

(ஆ) ஆதித்திறளைக் கைப்பற்றுதல்

(இ) அரணைக் கைப்பற்றுதல்

(ஈ) ஆநிரைகளைக் காத்தல்

6. கொற்றவையினது அருள்தன்மையைப் பாராட்டியது.

(அ) கொற்றவஞ்சி

(ஆ) கொற்றவைநிலை

(இ) கொற்றவள்ளை

(ஈ) மறவஞ்சி

7. தன் மார்பின் புண்ணைத் தானே கிழித்து மாய்வது.

(அ) பேய்நிலை (ஆ) மறக்காஞ்சி

(இ) தலைமாராயம் (ஈ) பேய்க்காஞ்சி

8. உழிஞை வேந்தனின் புகழைப் பாராட்டியது.

(அ) கந்தழி (ஆ) அரசஉழிஞை

(இ) முற்றுழிஞை (ஈ) காந்தன்

9. மறவன் ஒருவன் தனது மார்பினைப் பிளந்த பகைவன் வேலினைப் பிடுங்கி அப்பகைவர் ஓடும்படி எறிவது.

(அ) ஒள்வாள் அமலை (ஆ) நூழிலாட்டு

(இ) தானைநிலை (ஈ) தானைமறம்

10. மடவரன் மகளிரின் மறம் பாடுவது

(அ) அவயமுல்லை

(ஆ) மூதின்முல்லை

(இ) வல்லாண்முல்லை

(ஈ) ஏறாண்முல்லை

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) பெரும்பொழுதின் வகைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஐந்திணைக்குரிய உரிப்பொருளைக் கூறுக.

12. (அ) களவின்கண் நிகழும் பிரிவு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பத்துவகை அவத்தைகளை விளக்கி எழுதுக.

13. (அ) நிரை கவர்தல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நிரை மீட்டல் குறித்து எழுதுக.

14. (அ) தொட்டக்காஞ்சி, தொடாக்காஞ்சி – விளக்குக.

(அல்லது)

(ஆ) மண்ணுமங்கலம் துறையை விளக்குக.

15. (அ) முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை – விளக்குக.

(அல்லது)

(ஆ) கூதிர்ப்பாசறை, வாடைப் பாசறை – விளக்குக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) கைக்கிளை, பெருந்திணை – விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐந்திணைக்குரிய முதற்பொருள் – விளக்குக.

17. (அ) கற்பின்கண் நிகழும் பிரிவுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அறத்தொடு நிற்றல் – குறித்து விளக்குக.

18. (அ) வெட்சியின் சிறப்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) வஞ்சிப் போர்ச்செய்திகளைக் கூறுக.

19. (அ) உழிஞையின் சிறப்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) நொச்சித்திணை, துறைகளை விளக்குக.

20. (அ) வாகையின் சிறப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) புறப்பொருள் தரும் போர்ச் செய்திகளைத் தருக.

(6 pages) **Reg. No. :** ......................................

**Code No. : 32015** **Sub. Code : GMTA 63/ GMTC 63**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil/Tamil with Computer Science — Main

இலக்கிய வரலாறு

(For those who joined in July 2012 – 2015)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?

   (அ) மாறன் வழுதி (ஆ) பூரிக்கோ

   (இ) கடலூர் கிழார் (ஈ) நல்லந்துவனார்

2. களவழி நாற்பது பாடியவர் யார்?

   (அ) நல்லாதனார் (ஆ) கபிலர்

   (இ) காரியாசான் (ஈ) பொய்கையார்

3. ஏழாம் திருமுறையைப் பாடியவர் யார்?

(அ) மாணிக்கவாசகர் (ஆ) சுந்தரர்

(இ) திருமூலர் (ஈ) அப்பர்

4. "வையத் தகளியா" எனும் பாடலைப் பாடியவர்.

(அ) பூதத்தாழ்வார்

(ஆ) பேயாழ்வார்

(இ) பொய்கையாழ்வார்

(ஈ) ஆண்டாள்

5. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் யார்?

(அ) நாதகுப்தனார்

(ஆ) தோலா மொழித் தேவர்

(இ) அருண்மொழித் தேவர்

(ஈ) திருத்தக்கத் தேவர்

6. 'குடும்ப விளக்கின்' ஆசிரியர் யார்?

(அ) கண்ணதாசன் (ஆ) வாணிதாசன்

(இ) பாரதிதாசன் (ஈ) ஷெல்லி தாசன்

7. முதல் உலாநூல் எது?

(அ) மூவருலா

(ஆ) திருவாரூர் உலா

(இ) திருகைலாய ஞான உலா

(ஈ) விக்ரமசோழன் உலா

8. தொல்காப்பியத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன.

(அ) 27 (ஆ) 28

(இ) 29 (ஈ) 30

9. 'பொன்னியின் செல்வன்' புதினத்தை எழுதியவர் யார்?

(அ) சுஜாதா (ஆ) கல்கி

(இ) புதுமைப்பித்தன் (ஈ) சாண்டில்யன்

10. புதுக்கவிதையின் முன்னோடி யார்?

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன்

(இ) கவிமணி (ஈ) வைரமுத்து

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

11. (அ) முச்சங்கம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கில் அகநூற்கள் குறித்து எழுதுக.

12. (அ) மணிமேகலை குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) நளவெண்பா குறிப்பு வரைக,

13. (அ) நம்மாழ்வார் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆண்டாளின் பக்தி சிறப்பு யாது?

14. (அ) கலம்பகம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உரையாசிரியர்களில் இளம்பூரணர் குறித்து எழுதுக.

15. (அ) வரலாற்று புதினங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தகவல்தொடர்பு சாதனங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக. வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடுக்க.

16. (அ) சங்ககாலம் பொற்காலம் நிறுவுக.

(அல்லது)

(ஆ) பதினெண் கீழ்க்கணக்கில் அறநூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. (அ) மூவர் தேவாரம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பெரியபுராணத்தின் சிறப்புக்களைத் தொகுத்தெழுதுக.

18. (அ) சிலப்பதிகாரம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) ஐந்நூறு காப்பியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

19. (அ) ஆற்றுப்படை இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியங்களில் ஏதேனும் ஐந்து குறித்துக் கட்டுரை வரைக.

20. (அ) நாடகம் தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதை தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

———————

**Reg. No. : .......................**

**Code No. : 32016** **Sub. Code : GMTA64/ GMTC64**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil/Tamil with CA – Main

இலக்கியத் திறனாய்வு

(For those who joined in July 2012–15)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க.

1. விமர்சனக் கலை நூலை எழுதியவர் யார்?

(அ) க.த.திருநாவுக்கரசு (ஆ) க.பஞ்சாங்கம்

(இ) சு.பாலச்சந்திரன் (ஈ) தொ.மு.சி

2. இலக்கியம் என்னும் சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் யார்?

(அ) மேத்யு ஆர்னால்டு

(ஆ) சிப்ளே உலக இலக்கிய அகராதி

(இ) தோலாமொழித்தேவர்

(ஈ) எஸ்.எம்.ஸ்கீரிபர்

3. ‘கலைகலைக்காகவே’ என்ற கொள்கையை வலியுறுத்தியவர் யார்?

(அ) காண்ட் (ஆ) டேவிட்செய்சஷ்

(இ) வில்லியம் ராபாவ் (ஈ) ஹேரிலெவின்

4. இலக்கியம் விமர்சனம் நூலாசிரியர்

(அ) க.கைலாசபதி (ஆ) நா.வானமாமலை

(இ) சி.சு.செல்லப்பா (ஈ) தொ.மு.சி.ரகுநாதன்

5. இலக்கியம் என்பது சமுதாயத்தின் புலப்பாடு

(அ) தே.பொனால்ட் (ஆ) ஹேரிலெவின்

(இ) ரெனிவெல்லல் (ஈ) ஹென்னக்யுன்

6. குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளைக் கூறுவது எவ்வகைத் திறனாய்வு

(அ) பாராட்டு முறைத்திறனாய்வு

(ஆ) பகுப்பு முறைத்திறனாய்வு

(இ) விதி முறைத்திறனாய்வு

(ஈ) முடிபு முறைத்திறனாய்வு

7. இலக்கியப் பகர்வின் பேச்சு நடப்பு கொள்கை என்றவர்

(அ) ஹாலிடே (ஆ) மாரி லூயி பிராத்

(இ) வில்லியம் ராபாவ் (ஈ) பி.எஸ்.ராமகிருஷ்ணா

8. யூலிசெஸ் என்ற நமவோடைப் புதினத்தை எழுதியவர்

(அ) ஜேம்ஸ் ஜாய்ஸ் (ஆ) வேர்ட்ஸ்வொர்த்

(இ) உல்ப் (ஈ) ஐன்ஸ்டீன்

9. கம்பராமாணத்தை முதன் முதலில் ஒப்பீட்டுமுறையில் திறனாய்வு செய்தவர் யார்?

(அ) வ.வே.சு.ஐயர் (ஆ) இராபர்ட் விடில்

(இ) சேம்பர் அகராதி (ஈ) வின்செஸ்டர்

10. இலக்கியக் கட்டுரையின் இன்றியமையாத பண்பு எது?

(அ) கரு (ஆ) நடை

(இ) வடிவம் (ஈ) அமைப்பு

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) திறனாய்வு என்பதன் வரையறையைத் தருக.

(அல்லது)

(ஆ) திறனாய்வு எல்லைப் பரப்பினை விவரிக்க.

12. (அ) ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) பாராட்டுமுறைத் திறனாய்வு என்றால் என்ன?

13. (அ) மொழியியல் அணுகுமுறையின் அவசியத்தை கூறுக.

(அல்லது)

(ஆ) உருவவியல் திறனாய்வு என்றால் என்ன?

14. (அ) அறநெறித் திறனாய்வு என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) தொல்படிமவியல் என்றால் என்ன?

15. (அ) தலித்தியத் திறனாய்வை விளக்கு?

(அல்லது)

(ஆ) பெண்ணியத் திறனாய்வின் வகைகளைக் கூறுக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) திறனாய்வாளரின் தகுதிகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பன்முகவியம் குறித்துச் சுருக்கி வரைக.

17. (அ) அழகியல் திறனாய்வு படைப்பிலக்கியங்களில் பெறுமிடத்தை ஆய்க.

(அல்லது)

(ஆ) விதிமுறைத் திறனாய்வின் இன்றியமையாமையைத் தொகுத்துரைக்க.

18. (அ) வரலாற்றியல் அணுகுமுறையைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மனிதனின் படைப்புத் தன்மையை ஆராய உளவியல் அணுகுமுறை அவசியமா? என ஆய்க.

19. (அ) பின்னை நவீனத்துவத்தின் வளர்ச்சி நிலைகளை ஆய்க.

(அல்லது)

(ஆ) மார்க்சிய அணுகுமுறையைத் தொகுத்துரைக்க.

20. (அ) தலித்திய திறனாய்வின் வளர்ச்சி நிலைகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பெண்ணியத் திறனாய்வின் தோற்றம் வளர்ச்சி குறித்து வரைக.

———————

(6 pages) **Reg. No. :** ........................................

**Code No. : 32064** **Sub. Code : JMTA 61**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil – Main

சங்க இலக்கியம்

(For those who joined in July 2016 only)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பட்டினப்பாலையின் எத்தனை அடி எண்ணிக்கை உடையது?

   (அ) 301

   (ஆ) 269

   (இ) 103

   (ஈ) 188

2. திருமாவளவன் எவ்வூரைச் சிறப்பு செய்தான்?

(அ) மதுரை (ஆ) வஞ்சி

(இ) கொற்கை (ஈ) உறையூர்

3. உமணர் என்பவர் யார்?

(அ) வேடர்கள்

(ஆ) வெற்றிலை விற்பவர்

(இ) உப்பு வணிகர்

(ஈ) படகு ஓட்டுநர்

4. ஐங்குறுநூறு நெய்தல் திணையைப் பாடியவர் யார்?

(அ) அம்மூவனார் (ஆ) இளநாகனார்

(இ) கபிலர் (ஈ) பெருங்கடுங்கோ

5. முந்நீர் எனப்படுவது எந்நீர்?

(அ) ஆற்று நீர் (ஆ) கடல் நீர்

(இ) மழை நீர் (ஈ) கிணற்று நீர்

6. முல்லைத்திணைக்குரிய உரிப்பொருள் யாது?

(அ) புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

(ஆ) இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

(இ) இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

(ஈ) ஊடலும் ஊடல் நிமித்தமும்

7. சேர மன்னர்களைப் பற்றிப் பாடிய நூல் எது?

(அ) ஐங்குறுநூறு

(ஆ) அகநானூறு

(இ) பட்டினப்பாலை

(ஈ) பதிற்றுப்பத்து

8. பாரதப்போரில் பெருஞ்சோறு கொடுத்தவன் யார்?

(அ) செங்குட்டுவன்

(ஆ) நெடுஞ்செழியன்

(இ) உதியஞ்சேரலாதன்

(ஈ) மாறன் வழுதி

9. பலராமனுடைய கொடி எது?

(அ) கருடக்கொடி

(ஆ) புலிக்கொடி

(இ) பனைக்கொடி

(ஈ) அரவுக்கொடி

10. முருகப்பெருமானின் யானை ஊர்தியின் பெயர் என்ன?

(அ) அரி

(ஆ) பிணிமுகம்

(இ) உழுவை

(ஈ) கிள்ளை

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

பின்வரும் வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

11. (அ) பட்டினப்பாலை குறிப்பிடும் வணிகர்களின் வாழ்க்கை முறையை விவரிக்க.

(அல்லது)

(ஆ) திருமாவளவன் பகைவர் நாட்டைப் பாழ்படுத்தியமையை விளக்குக.

12. (அ) ஆதிமந்தியாரின் அறத்தொடு நிற்றல் பாடற்கருத்தை ஆய்க.

(அல்லது)

(ஆ) குறுந்தொகை முல்லைத்திணைத் தலைவியின் நிலையைப் புலப்படத்துக.

13. (அ) பாலைக்கலி தலைவி கூற்றுப் பாடற்கருத்தை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பரணரின் அகநானூற்றுப் பாடற்கருத்தை ஆய்க.

14. (அ) செல்வக்கடுங்கோ வாழியாதனின் செல்வ வளத்தினைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) சேரமான் பெஞ்சோற்று உதியஞ்சேரலாதனின் வீரத்தினை ஆய்க.

15. (அ) திருமாலின் படைச்சிறப்பினைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) வையையில் நீர் வருகையைக் குறிப்பிடுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

பின்வரும் வினாக்களுக்கு <u>600</u> சொற்களில் விடை தருக.

16. (அ) சோழநாட்டு வளத்தினை பட்டினப்பாலை வழி ஆய்க.

(அல்லது)

(ஆ) பட்டினப்பாலை குறிப்பிடும் திருமாவளவனின் பெருமைகளை மதிப்பிடுக.

17. (அ) குறுந்தொகை சித்திரிக்கும் நிலப்பாகுபாடுகளைத் திறனாய்க.

(அல்லது)

(ஆ) ஐங்குறுநூறு தாய்க்கு உரைத்த பத்து பதிகச் செய்திகளைப் புலப்படுத்துக.

18. (அ) கலித்தொகை புலப்படுத்தும் பாலை நிலத்தன்மைகளை ஆய்க.

(அல்லது)

(ஆ) அகநானூறு புலப்படுத்தும் பண்டைய தமிழர்களின் அகவாழ்க்கை முறையை ஆராய்க.

19. (அ) செல்வக்கடுங்கோ வாழியாதனின் பெருமைகளைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) புறநானூறு குறிப்பிடும் அரச இயல்புகளைத் தெளிவுறுத்துக.

20. (அ) பரிபாடல் குறிப்பிடும் திருமாலின் பெருமைகளை ஆய்க.

(அல்லது)

(ஆ) திருப்பரங்குன்றச் சிறப்புக்களை பரிபாடல் வழி ஆராய்க.

---

Reg. No. : ..........................................

**Code No. : 32065** **Sub. Code : JMTA 62/ SMTA 62**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

தமிழ் — Main

சமய இலக்கியம்

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை தேர்வு செய்க.

1. திருமால் கையில் வைத்திருக்கும் சக்கரத்தின் பெயர்

(அ) சங்குபுரி (ஆ) சுதர்சனம்

(இ) சடாரி (ஈ) காண்டீபம்

2. குவாலய பீடம் என்பது என்ன?

(அ) யானை (ஆ) மான்

(இ) பலிபீடம் (ஈ) நாய்

3. 'அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட' - யார்?

(அ) சிவன் (ஆ) பிரம்மா

(இ) இராவணன் (ஈ) திருமால்

4. ‘கோளறு பதிகத்தைப் பாடியவர்’ யார்?

(அ) மாணிக்கவாசகர் (ஆ) அப்பர்

(இ) சுந்தரர் (ஈ) திருஞானசம்பந்தர்

5. ‘வராக உருவம் எடுத்தவர்’ யார்?

(அ) திருமால் (ஆ) சிவன்

(இ) இந்திரன் (ஈ) முருகன்

6. ‘குரவுவார் குழல் மடவாள்’ யார்?

(அ) லட்சுமி (ஆ) பார்வதி

(இ) சரஸ்வதி (ஈ) வள்ளி

7. சூசையும் மரியாளும் யூதேயா நாட்டை விட்டு எந்த நாட்டிற்குச் சென்றனர்?

(அ) எகிப்து (ஆ) இஸ்ரேல்

(இ) பாலஸ்தீனம் (ஈ) வாடிகன்

8. ‘பல்லியம் கடலொலி பட முழங்கினர்’ இதில் பல்லியம் என்பதன் பொருள் என்ன?

(அ) கடல் ஒலி (ஆ) போர் ஒலி

(இ) இசைக்கருவி (ஈ) நடனம்

9. சீறாபுராணத்தில் நகரப் படலம் எந்த காண்டத்தில் அமைந்துள்ளது?

(அ) விதாலத்து காண்டம்

(ஆ) நுபுபத்துக் காண்டம்

(இ) ஹிஜிரத்துக் காண்டம்

(ஈ) எதுவமில்லை

10. ஜபுறயில் என்பவர்கள் யார்?

(அ) தேவர்கள் (ஆ) அசுரர்கள்

(இ) நபிமார்கள் (ஈ) மலாயிக்கத்து மார்கள்

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக
(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) ஆண்டாள் காமதேவனை அழைத்து என்ன வேண்டுகிறார்?

(அல்லது)

(ஆ) கூடல் இழைத்தல் என்றால் என்ன?

12. (அ) திருஞான சம்பந்தர் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) வேயுறு தோழிபங்களின் சிறப்புக்கள் யாவை?

13. (அ) சிவனின் பாதங்களை அடையமுடியவில்லை என மாணிக்கவாசகர் ஏன் வருந்துகிறார்?

(அல்லது)

(ஆ) 'வேனில் வேள் மலர்கணைக்கும்' எதைத் தொடங்கும் பாடலின் பொருள் தருக.

14. (அ) வானவர் புடைசூடி இயேசு எவ்வாறு சென்றார்?

(அல்லது)

(ஆ) ஏசு நாதரின் அழகை எடுத்துரைக்க.

15. (அ) சங்கநிதி பதுமநிதியின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மக்கமா நகரின் செழிப்பினை எடுத்துரைக்க.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>600</u> சொற்களில் விடை தருக.

(அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) கோபியர்களின் ஆடைகளைக்கவர்ந்த கண்ணனை எவ்வாறு ஆண்டாள் பாடுகிறார்.

(அல்லது)

(ஆ) தோழியழைப்பதன் முன்னம் என தொடங்கும் பதிகத்தில் ஆண்டாள் கூறுவது யாது?

17. (அ) அடிமுடி அறியமுடியாத இறைவனின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாளும் கோளும் தீமை செய்யாது என ஞானசம்பந்தர் கூறுவது யாது?

18. (அ) சிவபெருமானின் சிறப்புக்களை அச்சப்பத்து வாயிலாக எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அறிவுறுத்தல் மூலமாக மாணிக்கவாசகர் கூறும் பக்தி யாது?

19. (அ) எகிப்தின் இயற்கை எழிலை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மரியாளும் சூசையும் எவ்வாறு மனம் தெளிந்து யூதேயா நாட்டை விட்டு நீங்கினார்கள்?

20. (அ) மக்கமா நகர மாளிகைகளின் சிறப்புக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) மக்கமா நகரம் சொர்க்கம் போன்றது விளக்குக.

———————

(6 pages) **Reg. No. : ..........................................**

**Code No. : 32066** **Sub. Code : JMTA 63**

B.A. (CBCS) DEGREE EXAMINATION,
APRIL 2020.

Sixth Semester

Tamil — Main

இலக்கிய வரலாறு

(For those who joined in July 2016 only)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை தருக.

1. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?

(அ) புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்

(ஆ) பூரிக்கோ

(இ) பன்னாடு தந்த மாறன் வழுதி

(ஈ) உருத்திரசின்மர்

2. பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பபெற்றுள்ள ஒரே புறநூல் எது?

(அ) கார்நாற்பது

(ஆ) இனியவை நாற்பது

(இ) இன்னா நாற்பது

(ஈ) களவழி நாற்பது

3. சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறையின் வேறுபெயர் என்ன?

(அ) திருப்பாட்டு

(ஆ) திருக்கோவை

(இ) திருவிடைப்பா

(ஈ) திருப்பள்ளியெழுச்சி

4. தக்கயாகப் பரணி நூலின் ஆசிரியர் யார்?

(அ) புகழேந்தி (ஆ) கம்பர்

(இ) ஒட்டக்கூத்தர் (ஈ) சேக்கிழார்

5. கலம்பக நூல்களில் காலத்தால் முந்திய நூல் எது?

(அ) தில்லைக்கலம்பகம்

(ஆ) நந்திக்கலம்பகம்

(இ) மதுரைக்கலம்பகம்

(ஈ) திருவரங்கக் கலம்பகம்

6. நந்தவனத்திலோர் ஆண்டி என்று பாடிய சித்தர் யார்?

(அ) திருமூலர் (ஆ) அகப்பேய்ச்சி சித்தர்

(இ) குதம்பைச் சித்தர் (ஈ) கடுவெளிச்சித்தர்

7. பன்னிரு திருமுறைத் தொகுத்தவர் யார்?

(அ) திருஞான சம்பந்தர் (ஆ) நம்பியாண்டார் நம்பி

(இ) நாதமுனிகள் (ஈ) சுந்தரர்

8. சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

(அ) செய்குத்தம்பி பாவலர்

(ஆ) குணங்குடி மஸ்தான்சாகிபு

(இ) உமறுப்புலவர்

(ஈ) குலாம்காதிறு நாவலர்

9. தமிழ்ச் சிறுகதையின் முன்னோடி யார்?

(அ) தத்துவபோதகர் (ஆ) வ.வே.சு. ஐயர்

(இ) கல்கி (ஈ) வீரமாமுனிவர்

10. கிறித்தவர்களின் தேவாரம் என அழைக்கப்படும் நூல் எது?

(அ) இரட்சணிய மனோகரம்

(ஆ) தேம்பாவணி

(இ) இரட்சணிய யாத்திரிகம்

(ஈ) இரட்சணிய குறள்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) முச்சங்கங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நாலடியார் குறிப்பிடுக.

12. (அ) ஆண்டாளின் பக்திநிலையை விளக்குக.

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப்பரணியின் சிறப்பை எடுத்துரைக்க.

13. (அ) கோவை நூல்களின் தனித்தன்மைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) குறவஞ்சி இலக்கியங்கள் குறித்து எழுதுக.

14. (அ) சைவ மடங்களின் தமிழ்ப்பணி குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) குணங்குடி மஸ்தான் சாகிபின் நூல்கள் குறித்து விளக்குக.



[P.T.O.]

15. (அ) வீரமாமுனிவரின் சமய இலக்கியப் பணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வேதநாயக சாஸ்திரியாரின் தமிழ்ப்பணியினைக் குறிப்பிடுக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) எட்டுத் தொகை அகநூல்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இரட்டைக் காப்பியங்கள் குறித்து விவரிக்க.

17. (அ) திருஞானசம்பந்தரின் பக்திநெறியைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ஐஞ்சிறு காப்பியங்கள் குறித்து விளக்குக.

18. (அ) பிள்ளைத் தமிழ் நூல்களின் சிறப்பியல்புகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பள்ளு இலக்கியங்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவிய பாங்கைப் புலப்படுத்துக.

19. (அ) வைணவ உரைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சமணக் காப்பியங்கள் குறித்து விவரிக்க.

20. (அ) ஐரோப்பியர்களின் வருகையால் எற்பட்ட தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) எச். ஏ. கிருஷ்ணபிள்ளை, வேதநாயகம்பிள்ளையின் தமிழ்ப் பணிகளைத் தொகுத்துரைக்க.

———————

**Reg. No. : ..........................................**

**Code No. : 32072** **Sub. Code : JMTA 6 A**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

தமிழ் — Core

Major Elective — தமிழக வரலாறும் பண்பாடும்

(For those who joined in July 2016 only)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதிய அறிஞர் யார்?

 (அ) கால்டுவெல் (ஆ) சீகன்பால்க்

 (இ) பேட் (ஈ) யுரேனியஸ்

2. ஆதிச்சநல்லூர் எந்த ஆற்றங்கரையில் உள்ளது?

 (அ) காவிரி (ஆ) தாமிரபரணி

 (இ) வைகை (ஈ) கங்கை

3. குறிஞ்சிநில மக்களின் வழிபடு தெய்வம்?

 (அ) மாயோன் (ஆ) கிருஷ்ணன்

 (இ) முருகன் (ஈ) சிவன்

4. திருப்பாதிரிப்புலியூர் சமணப்பள்ளியை இடித்து சிவாலயத்தை எழுப்பிய மன்னன் யார்?

(அ) நரசிம்மன் (ஆ) மாறவர்மன்

(இ) குணபாண்டியன் (ஈ) மகேந்திர வர்மன்

5. 'மும்முடிச் சோழன்' என்ற பெயர் பெற்ற சோழ மன்னன் யார்?

(அ) இராசராசன் (ஆ) இராசேந்திரன்

(இ) பராந்தகன் (ஈ) ஆதித்தன்

6. மார்க்கோபோலோ எந்த நாட்டு வழியே வந்தார்?

(அ) சேரநாடு (ஆ) பாண்டியநாடு

(இ) சோழநாடு (ஈ) பல்லவநாடு

7. விஜய நகர ஆட்சிக் காலத்தில் வலுப்பெற்ற சமயம் எது?

(அ) சைவம் (ஆ) பௌத்தம்

(இ) வைணவம் (ஈ) இசுலாம்

8. மூக்கறுப்புப் போர் எப்போது நடந்தது?

(அ) 1566 (ஆ) 1606

(இ) 1506 (ஈ) 1656

9. டேனிசு கிழக்கிந்தியக் கம்பெனி தமிழகத்தில் தங்கி வாணிபம் செய்த பகுதி எது?

(அ) குமரி (ஆ) தரங்கம் பாடி

(இ) கிழக்குக் கடற்கரை (ஈ) ஏதுமில்லை

10. வேலூரில் சிப்பாய்கள் கலகம் நடந்தது எப்போது?

(அ) 1608 (ஆ) 1861

(இ) 1806 (ஈ) 1816

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) தமிழகத்தின் எல்லைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சிந்து வெளியினர் பற்றி எழுதுக.

12. (அ) களப்பிரர்கள் யார்?

(அல்லது)

(ஆ) குறும்பர்கள் எனப்படுபவர் யார்?

13. (அ) இராஜராஜ சோழன் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சோழர் காலக் கட்டடக்கலைக்கு ஏதேனும் சான்று தருக.

14. (அ) மாலிக்காபூர்-குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) சம்புவராயர்கள் பற்றி எழுதுக.

15. (அ) போர்த்துக்கீசியர்கள் வருகையின் காரணம் யாது?

(அல்லது)

(ஆ) வீரபாண்டிய கட்டபொம்மன்-குறிப்பு தருக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) தொல்பொருள் ஆய்வில் பழம்பொருட்சின்னங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை முறையை விளக்கி வரைக.

17. (அ) பல்லவர்களின் கலைத்தொண்டினைப் பட்டியலடுக.

(அல்லது)

(ஆ) பக்திப்பணியில் சமயக்குரவர்களின் தொண்டு எத்தகையது விரித்துரைக்க.

18. (அ) பிற்காலச் சோழர் வரலாற்றை அறிய உதவும் சான்றுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சோழர் கால நிர்வாக அமைப்பு விவரி.

19. (அ) தமிழகத்தில் முசுலீம் படையெடுப்புகள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) மதுரை நாயக்கர்கள் பற்றி கட்டுரை வரைக.

20. (அ) ஐரோப்பியர்களின் காலம் குறித்து விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாளையக்காரர்கள் மீதான அடக்கு முறையை எடுத்துரைக்க.

———————

**Reg. No. : ........................................**

**Code No. : 32113** **Sub. Code : SMTA 61**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil – Main

இலக்கணம் – புறப்பொருள்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. மலையும் – மலை சார்ந்த இடமும்

   (அ) குறிஞ்சி (ஆ) முல்லை

   (இ) மருதம் (ஈ) நெய்தல்

2. கரந்தையரவம் என்பது எதைக் குறிக்கும்?

   (அ) போர் ஓசை (ஆ) விளையாட்டு ஓசை

   (இ) சிரிப்போசை (ஈ) அருவி ஓசை

3. வஞ்சித்திணையின் துறைகள் எத்தனை?

   (அ) 20 (ஆ) 18

   (இ) 22 (ஈ) 25

4. எல்லையில் பகைவர் நுழையாமல் தடுத்துப் போரிடுவது

(அ) காஞ்சித்திணை (ஆ) வெட்சித்திணை

(இ) நொச்சி (ஈ) உமிஞை

5. மருத நிலத்திற்குரிய மரம் எது?

(அ) நொச்சி (ஆ) வாகை

(இ) வேங்கை (ஈ) தேக்கு

6. வெண்கொற்றக் குடையைப் போருக்காக அனுப்புவது

(அ) குடைநாட்கோள் (ஆ) வாள்நாட்கோள்

(இ) விண்கோள் (ஈ) தேர்க்கோள்

7. நெய்தல் நிலத்திற்கான பூ எது?

(அ) தும்பைப்பூ (ஆ) வெட்சிப்பூ

(இ) கரந்தைப்பூ (ஈ) முல்லைப் பூ

8. ரிக், யசூர், சாமம், அதர்வணம் எதனைக் குறிக்கிறது?

(அ) நான்மறை (ஆ) ஐந்தொழில்

(இ) முத்தீ (ஈ) இரு பிறப்பு

9. பாடாண் திணைக்கான பூ எது?

(அ) முல்லை (ஆ) குறிஞ்சி

(இ) வெட்சி (ஈ) கரந்தை

10. யாமம் என்பது

(அ) இரவு (ஆ) முற்பகல்

(இ) முற்பகல் (ஈ) நள்ளிரவு

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளி.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) 'தன்னுறு தொழில்' என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'புண்ணொடு வருதல்' – துறையினை விளக்கி எழுதுக.

12. (அ) 'புறவீடு விடுதல் – நிகழ்வினைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) 'தழிஞ்சி' என்னும் துறையின் செய்தியினை எழுதுக.

13. (அ) செரு + இடை + வீழ்தல் – எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கொற்ற உமிஞை – புலப்படுத்தும் செய்தியினை எழுதுக.

14. (அ) தும்பை வேந்தனின் குதிரையின் ஆற்றலைக் காட்சிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அரசனை உழவனாகச் சித்தரிக்கும் துறையினை விளக்குக.

15. (அ) பரிசில் துறையில் இரவலன் மன்னனிடம் விரும்பிக் கேட்பதைச் சுட்டியெழுதுக.

(அல்லது)

(ஆ) வெள்ளிக்கோளின் சிறப்பினை எழுதுக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு கட்டுரை வடிவில் 600 சொற்களில் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்வு செய்க.

16. (அ) விரிச்சி கேட்டலை விரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) கரந்தைத்திணையினை விளக்கி அதன் துறைகளை வரிசைப்படுத்துக.

17. (அ) பாசறை நிலைத் துறையினை காட்சிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) படைவழக்கினைத் தொகுத்து எழுதுக.

18. (அ) மகள் மறுத்து மொழிதல் எப்படலத்தில் நிகழ்கிறது? விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) முரச உழிஞை; அரச உழிஞை விளக்கியெழுதுக.

19. (அ) தார்நிலைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கூதிர்ப்பாசறை; வாடைப் பாசறை – விளக்கியெழுதுக.

20. (அ) வேள்வி நிலை; வெள்ளி நிலைகளில் கூறப்படும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாணாற்றுப் படை, கூத்தராற்றுப் படைகளை புலப்படுத்துக.

(6 pages) **Reg. No. : ......................**

**Code No. : 32114** **Sub. Code : SMTA 63**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil – Main

இலக்கிய வரலாறு – II

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. தமிழின் முதல் இலக்கண நூல்

(அ) அகத்தியம் (ஆ) தொல்காப்பியம்

(இ) நன்னூல் (ஈ) இலக்கண விளக்கம்

2. மதாறு சாகிபு புலவர் இயற்றியது

(அ) மிதிறு சாரா (ஆ) முன்கிரின் மாலை

(இ) சீறாப் புராணம் (ஈ) துறவு நிலை

3. முக்கூடற்பள்ளி வணங்கும் தெய்வம்

(அ) பெருமாள் (ஆ) முருகன்

(இ) சிவன் (ஈ) பார்வதி

4. திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றியது

(அ) குற்றாலக் குறவஞ்சி

(ஆ) சீகாழிக்கோவை

(இ) பிள்ளைத்தமிழ்

(ஈ) இராம நாடகம்

5. பேயின் அலைச்சலைப் பேசியவர்

(அ) அகப்பேய்ச் சித்தர்

(ஆ) குதம்பைச் சித்தர்

(இ) தேரையர்

(ஈ) மச்சமுனி

6. நைடதம் நூல் கூறும் வரலாறு எது?

(அ) நளதமயநதி (ஆ) திரெளபதி

(இ) மாதவி (ஈ) மணிமேகலை

7. நமக்குத் தொழில் கவிதை – நாட்டிற்கு உழைத்தல்

(அ) பாரதியார் (ஆ) பாவேந்தர்

(இ) கவிமணி (ஈ) கண்ணதாசன்

8. தமிழ் நாடகத் தந்தை யார்?

(அ) சம்பந்த முதலியார்

(ஆ) சங்கரதாஸ் சுவாமிகள்

(இ) காளிதாசன்

(ஈ) பரிதிமாற் கலைஞர்

9. தமிழ் வளர்ச்சிக் கழகம் எப்பொழுது தொடங்கப்பட்டது?

(அ) 1946 (ஆ) 1950

(இ) 1948 (ஈ) 1952

10. இலக்கிய ஆராய்ச்சிக்கு வழிவகுத்தவர் யார்?

(அ) மு. வரதராசனார்

(ஆ) அண்ணா

(இ) ஆறுமுக நாயலர்

(ஈ) மறைமலையடிகள்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்றொடர்களில் விடையளி
வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) அகத்தியம் குறித்து சுருக்கமாகக் கூறுக.

(அல்லது)

(ஆ) எல்லிஸ் பாதிரியாரின் தமிழ்ப்பணியைச் சுட்டுக.

12. (அ) சிற்றிலக்கியங்களின் தன்மையை எழுதுக.

(அல்லது)

(ஆ) நல்வழியில் பயன்படாத செல்வம் குறித்து ஔவையார் கூற்றை எழுதுக.

13. (அ) 'சித்தர்கள்' – பொதுவான செய்திகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) வரவங்கராம பாண்டியர் குறிப்பு வரைக.

14. (அ) பாரதியாரின் இளமைப் பருவத்தை சுருங்கக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஊடகத்தமிழின் அவசியத்தை எடுத்துரைக்க.

15. (அ) சைவமும் தமிழும் – தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) மதுரை மடத்தின் தமிழ்ப்பணியை விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்றொடர்களில் விடையளி
வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) தொல்காப்பியத்தின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இஸ்லாமியர்களின் தமிழ்ப்பணியை விவரித்து எழுதுக.

17. (அ) கலம்பகம் குறித்த செய்திகளை விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) தனிப்பாடல்கள் என்றால் என்ன? தெளிவுறுத்துக.

18. (அ) தெம்பைச் சித்தரின் சிந்தனைகளை காட்சிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தாயுமானவரின் இறைத்திறனை விளக்குக.

19. (அ) கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் தமிழுணர்வைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ஊடகத்தமிழ் என்றால் என்ன? விளக்குக.

20. (அ) பன்னிரு திருமுறைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) திருப்பனந்தாள் மடத்தின் தமிழ்ப்பணிகளை விவரிக்க.

———————

(6 pages) **Reg. No. :** ........................................

**Code No. : 32115** **Sub. Code : SMTA 64**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2020.

Sixth Semester

Tamil — Main

தமிழக வரலாறும், பண்பாடும் – II

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விசாலய சோழனின் காலம்

   (அ) கி.பி.850-70 (ஆ) கி.பி.840-60

   (இ) கி.பி.830-50 (ஈ) கி.பி.860-910

2. சீர்விசயம் என்ற நாடு எந்த தீவில் அமைந்துள்ளது?

   (அ) சுபத்திரா (ஆ) இலங்கை

   (இ) ஜாவா (ஈ) தாய்லாந்து

3. பராந்தகன் எந்த சமயத்தைச் சேர்ந்தவர்

(அ) வைணவம் (ஆ) சைவம்

(இ) சமணம் (ஈ) பௌத்தம்

4. கிழக்கிந்திய கம்பெனி தொடங்கப்பட்ட ஆண்டு

(அ) 1600 (ஆ) 1612

(இ) 1500 (ஈ) 1716

5. இந்தியாவில் முதன் முதல் அடியெடுத்து வைத்த ஐரோப்பியர் யார்?

(அ) போர்ச்சுக்கீசியர் (ஆ) ஆங்கிலேயர்

(இ) இத்தாலியர் (ஈ) பர்மியர்

6. பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரன் யார்?

(அ) கட்டபொம்மன் (ஆ) ஊமைத்துரை

(இ) சுந்தரபாண்டியன் (ஈ) தானாபதி பிள்ளை

7. ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் நடத்திய கொங்கு நாட்டு வீரன்

(அ) தீர்த்தகிரி (ஆ) சின்ன மருது

(இ) பெரிய மருது (ஈ) சுந்தரபாண்டியன்

8. 1803-1807-ஆம் ஆண்டுகளில் சென்னையில் கவர்னராக இருந்தவர்

(அ) பெண்டிங்க்

(ஆ) வெல்லெஸ்லி

(இ) வாரன்ஹேஸ்டிங்ஸ்

(ஈ) கானிங்

9. சிப்பாய் கலகம் தோன்றிய ஆண்டு

(அ) 1851 (ஆ) 1848

(இ) 1859 (ஈ) 1860

10. வைக்கம் வீரர் யார்?

(அ) ஈ.வே.ரா. பெரியார்

(ஆ) காந்தியடிகள்

(இ) சிவஞானம் பிள்ளை

(ஈ) கே.வி.ரெட்டி

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

11. (அ) விக்ரமச் சோழன் பற்றி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மூன்றாம் குலோத்துங்கனின் வெற்றிகள் யாவை?

12. (அ) தஞ்சை மராட்டியின் காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் நான்கினைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) நாயக்கர் காலத் தமிழகத்தினைப் பற்றி ஐந்து குறிப்புகள் தருக.

13. (அ) பாளையக்காரர்களின் செயல்களைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தென்னிந்தியாவில் ஏற்பட்ட விடுதலைப் புரட்சியினைச் சுட்டுக.

14. (அ) ஐரோப்பியரின் வருகையால் இந்தியா பெற்ற பயன்கள் சிலவற்றை சுட்டுக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர், சீகன் பால்கு ஆசிரியரின் சமயத் தொண்டினை குறிப்பிடுக.

15. (அ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் கல்வி என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் வளர்ந்த முறையினை விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) சோழர் காலத்தில் தமிழகப் பண்பாடு பற்றி குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) சோழர்கள் ஆட்சி முறையின் சிறப்பமசங்கள் யாவை?

17. (அ) தமிழகத்தில் முஸ்லீம்களின் படையெடுப்புகளின் விளைவுகளை குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தஞ்சை மராட்டியர்கள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

18. (அ) அடிமை முறை ஒழிப்பு பற்றி கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) சமூக இயக்கங்களால் ஏற்பட்ட பயன்களைச் சுட்டுக.

19. (அ) மேலை நாட்டுக் கல்வி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆங்கிலக் கல்வி முறையால் தமிழகக் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக.

20. (அ) தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டில் சமயம் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தியது?

(அல்லது)

(ஆ) சமய நிறுவனங்கள் குறித்து எழுதுக.

---